# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8073043

C

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.த. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 1/AC/2019 | Date: நாள் 24-01-2019

2. (i) Act சட்டம்: The P.C. Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7, r/w

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Cr. P. C., — Sections பிரிவுகள்: 102

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 23-01-2019 — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 15.45 மணிக்கு முன்பு — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-01-2019 — Time : நேரம் 12.30 மணிக்கு

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-1 24-01-2019 — Time : நேரம் 12.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5.5 கி.மீ மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி 1-எண் இணை சார்பதிவகம் அலுவலகம், நாமக்கல்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.T. ஜெய் குமார் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1973 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – — Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் — (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திருமதி. A. சுகம், கண்காணிப்பாளர் / 1-எண் இணை சார்பதிவாளர் (பொறுப்பு) 1-எண் இணை சார்பதிவகம், நாமக்கல்.

   2) திரு. S. சந்திரமோகன், உதவியாளர், 1-எண் இணை சார்பதிவகம், நாமக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and t~~ook up the investigation~~ / directed Tmt. M. Nallammal ~~Rank~~ ... Inspr. of Police to take up the Investigation / ~~Refused~~ Investigation / ~~transferred to PS~~.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/01/19

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24/01/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24-01-2019 14-00 மணிக்கு

Name: பெயர் A.T. ஓம்குமார்
Rank: நிலை ......................No. எண் .........
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊ.த.க. பிரிவு, காமக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

E. Subbu HC(W)
24/01/19

**<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2019, u/s. 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C., வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:</u>**

- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 23.01.2019-ஆம் தேதி புதன்கிழமை மாலை 15.45 மணி முதல் 18.00 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், மாவட்ட பதிவாளர் அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் இயங்கிவரும் 1-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 24.01.2019-ஆம் தேதி நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 01/AC/2019, u/s. 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C.,-இன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், 1-எண் இணை சார்பதிவகம் அலுவலகத்தில் 1-எண் இணை சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரபதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும் அதற்கு பின்பும் இன்று 23.01.2019-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 23.01.2019-ம் தேதி மாலை 15.30 மணிக்கு நான், அரசு சாட்சிகள் திருமதி.A.சுந்தரவள்ளி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல், திரு.E.ராஜா, வருவாய் ஆய்வாளர், நல்லிபாளையம் பிர்க்கா, நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு 1-எண் இணை சார்பதிவக அலுவலகத்திற்கு மாலை 15.45 மணிக்கு சென்றேன். நாமக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் உள்ள 1-எண் இணை சார்பதிவகம் அலுவலகத்தில் உள்ளே நுழைந்தபோது மத்திய அறையில் கண்காணிப்பாளர்/1-எண் இணை சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.அ.சுகம் அவர்கள் சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்து

கொண்டு, திடீர் தணிக்கைக்காக வந்த விபரத்தையும், திடீர் தணிக்கை மேற்கொள்ள உடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினர் பற்றிய விபரங்களையும் தெரிவித்து அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகம் சோதனையிடப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் உதவியாளர் திரு.S.சந்திரமோகன், அலுவலக உதவியாளர் திரு.R.நல்லுசாமி, TCS கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திருமதி.K.ஜெயச்சித்ரா ஆகிய அலுவலர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பி3 இருக்கை உதவியாளர் திருமதி.M.கீதா, மாவட்ட பதிவாளர் தணிக்கை அலுவலகத்தில் பணிபுரியும் தட்டச்சர் செல்வி.A.பரமேஸ்வரி ஆகிய அலுவலர்களும் மற்றும் சென்னை ஆலன் இன்போடெக் கம்பெனியின் சார்பாக சார்பதிவகத்தில் உள்ள ஆவணங்களை ஸ்கேனிங் பணி செய்யும் செல்வி.K.ரம்யா மற்றும் திருமதி.M.சரஸ்வதி ஆகியோர்களும் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். அப்போது பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்கள் சிலரும், சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்தனர். திடீர் தணிக்கையின் போது 23.01.2019-ம் தேதியன்று மாலை 15.45 மணிவரை பதிவான ஆவண எண்கள் 145/2019 முதல் 160/2019 வரை மொத்தம் 14 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விபரங்கள் குறித்து 'A', 'B', 'C', 'D', 'G' & 'H' ஆகிய பதிவேடுகள் பார்வையிடப்பட்டன. சார்பதிவாளரிடம் 23.01.2019-ம் தேதி அன்று அரசு கணக்கில வசூல் செய்யப்பட்ட தொகை விபரங்கள் குறித்துக் கேட்டேன். அதற்கு அவர் அன்றைய தினம் மாலை 15.45 மணிவரை முறையே ஆவண எண்கள் 145/2019 முதல் 160/2019 வரை மொத்தம் 14 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 2 ஆவண நகல்கள் வேண்டி இணையம் மூலமாக ரொக்கம் செலுத்தி விண்ணப்பித்துள்ளதாகவும், ஆக மொத்தம் வரிசை எண்.1 முதல் 20 பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சொன்னார். அதற்காக A-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.2,10,649/-ம், நேரடி ரொக்க பணமாக ரூ.1,509/-ம் வசூல் செய்யப்பட்டதாக சார்பதிவாளர் தெரிவித்தார். மேலும் D-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.2,746/-ம், ரொக்கமாக ரூ.51/-ம் ஆக மொத்தம் ரூ.2,797/- வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேற்படி தொகைகளுக்கு உண்டான அன்றைய தினம் போடப்பட்ட இரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தன. இது தொடர்பாக A-மற்றும் D-கணக்குகளுக்கு தனித்தனியாக

இருந்த அரசு பணப்பெட்டிகளை சோதனை செய்து பார்க்கையில் A-கணக்கு தலைப்பில் ரூ.1,509/-ம், D.கணக்கு தலைப்பில் ரூ.51/-ம் சரியாக இருந்தது. மேற்படி பணம் முழுவதும் சார்பதிவாளரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

- 'A' கணக்கு பதிவேடு தொகுதி எண்-115 பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் பக்கம் எண் 81 முதல் 83 வரை அன்றைய தினம் 23.01.2019-ம்தேதி பதிவு செய்யப்படும் ஆவண எண்கள்.145/2019 முதல் 164/2019 வரை குறித்த பதிவுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிலுவையில் உள்ள ஆவணங்கள் 3/19 மற்றும் 4/19 குறித்த பதிவுகள் உள்ளது. (பக்கம்-1 முதல் 200 வரை)
- 'B' கணக்கு பதிவேடு தொகுதி எண்.11 பார்வையிடப்பட்டதில் ஆவண எண்.2747/18-ற்கு, 22.01.2019-ஆம் தேதி குறைவு முத்திரைக் கட்டணம் ரூ.2,000/- வசூல் செய்யப்பட்டதற்கான கடைசி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது .
- 'C' கணக்கு பதிவேடு தொகுதி எண்-18 பார்வையிட்டதில் பக்கம்-66-ல் 23.01.2019 தேதியில் இறுதி இருப்பு ரூ.5,692/- என்று பதிவுகள் உள்ளது. மேலும் பக்கம் 67-ல் கட்டட களப்பணி மூலம் ஆவண எண்.3530/2018-க்கு குறைவு முத்திரை தீர்வை + இணக்க கட்டணம் ரூ.18,995/- செலுத்திய பதிவுகள் உள்ளது. (பக்கம்-1 முதல் 364 வரை).
- 'D' கணக்கு கணினியில் பார்வையிட்டதில் அன்று 23.01.2019-ம் தேதி கடைசியாக பொதுத்தேடுதல் எண்.ECA/4514732/2019-ல் வில்லங்க சான்று பெற ரூ.451/- பெற்றமைக்கு கடைசி பதிவுகள் உள்ளது. அந்தப் பக்கத்திற்கான அச்சு நகல் எடுக்கப்பட்டு 1 எண் இணை சார்பதிவாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது (2 தாள்கள்).
- 'G' பதிவேடு தொகுதி எண்.20 பார்வையிடப்பட்டது. பக்கம்-68-ல் 21.01.2019-ம் தேதி கடைசியாக பதிவுகள் உள்ளது. அதற்குப்பின் எந்த பதிவுகளும் இல்லை. (பக்கம்-1 முதல் 93 வரை).

- 'H' கணக்கு தொகுதி எண்-23 பதிவேடு பார்வையிடப்பட்டது. பக்கம்-187-ல் 21.01.2019-ம் தேதி வரை பதிவுகள் உள்ளது. 22.01.2019-ஆம் தேதி எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. 23.01.2019-ஆம் தேதியில் திருமதி.சுகம் அவர்கள் இன்னும் இப்பதிவேடு முடிக்கப்படாமல் உள்ளதாக கூறினார். (பக்கம்-1 முதல் 199 வரை).
- 2019-ஆம் ஆண்டு தனிநபர் கையிருப்புப் பதிவேடு, மாவட்டப் பதிவாளர் அலுவலகம், நாமக்கல் பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-3 மற்றும் 4-ல் 23.01.2019-ம் தேதி கடைசியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பக்கம்-1 முதல் 45 வரை).
- நாமக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் உள்ள வருகைப் பதிவேடு-2019 தொகுதி எண்-50 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-2-ல் கண்காணிப்பாளர்/பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.அ.சுகம், உதவியாளர் திரு.S.சந்திரமோகன், பக்கம்-3-ல் அலுவலக உதவியாளர் திரு.நல்லுசாமி மற்றும் இதர அலுவலர்கள் அன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர். (பக்கம்-1 முதல் 94 வரை).
- தன்பதிவேடு தொகுதி எண்.504 பார்வையிடப்பட்டது. பக்கம்-7-ல் வரிசை எண்.20-ல் நடப்பு எண் 313 என்று குறிப்பிட்டு, இறுதியாக 22.01.2019-ஆம் தேதி பதிவுகள் உள்ளது. (பக்கம்-1 முதல் 200 வரை).
- இருசால் பதிவேடு தொகுதி எண்.64 பார்வையிட்டதில் கடைசியாக 23.01.2019-ல் ரொக்கமாக ரூ.4,222/-ம், வரைவோலையாக ரூ.34,207/-ம் ஆக மொத்தம் ரூ.38,429/-ஐ அலுவலக உதவியாளர் திரு.நல்லுசாமி வங்கியில் செலுத்த பெற்றுக்கொண்டதாக பதிவுகள் உள்ளது.
- தமிழ்நாடு திருமண பதிவுச்சட்டம் கட்டணப் பதிவேடு தொகுதி எண்.4 பார்வையிட்டதில் பக்கம்-28ல் கடைசியாக 23.01.2019-ஆம் தேதி திருமணப்பதிவுக்கட்டணம் ரூ.100/-, நகல் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் 3 நகல்களுக்கும், ஆக மொத்தம் ரூ.130/- செலுத்திய பதிவுகள் உள்ளது. (பக்கம்-1 முதல் 135 வரை).

மேற்கண்ட பதிவேடுகளை பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் (D-கணக்கு தலைப்புத் தவிர) நானும், அரசு சாட்சிகளும் சுருக்கொப்பம் செய்து, அதன் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு 1-எண் இணை சார்பதிவாளர் திருமதி.சுகம் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் சார்பதிவாளரிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டேன், அவர் 2019-ஆம் ஆண்டிற்கான கொடிநாள் நிதி வசூல் இலக்கு நிர்ணயித்து இன்னும் ரசீது புத்தகம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். பிறகு 1-எண் இணை சார்பதிவாளரின் இருக்கை மற்றும் அலுவலர்களின் இருக்கைகள் முழுவதும் அதனை சுற்றியுள்ள இடங்களிலும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் நான், அரசு சாட்சிகளையும், சார்பதிவாளர் திருமதி.சுகம் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலக பதிவறைக்கு சென்று அங்கிருந்த அலுவலக பணப்பெட்டகம் பார்வையிட்டேன், அதில் மொத்தம் ரூ.5,692/- பணம் சரியாக இருந்தது. அது மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்டது என்று தெரிவித்ததால் அதை சார்பதிவாளரிடம் ஒப்படைத்தேன். பின்னர் பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டதில், ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டாவது ரேக்கின் அருகில் இருந்த இரண்டு மரப்பெட்டிகளுக்கு நடுவில் இ.அ.ப. மட்டும் என்று சீலிடப்பட்டும், 5 ரூபாய் தபால் வில்லை ஒட்டப்பட்டு சீலிடப்பட்டும், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நல்லிபாளையம், நாமக்கல் என்று முகவரி எழுதப்பட்ட பாதி முகவரி தெரியும் விதத்தில் பாதி கிழிக்கப்பட்ட காக்கி நிற கவரில் மடிப்புடன் கத்தையாக பணம் இருந்தது, அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் ரூ.9,800/- (Rs.2000x1, Rs.500 x 14, Rs.200 x 1, Rs.100 x 6) இருந்தது. அந்தப் பணம் குறித்து சார்பதிவாளர் திருமதி.சுகம் மற்றும் அலுவலக அலுவலர்களை கேட்டபோது அந்த பணம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னார்கள். அப்பணம் ரூ.9,800/-ஐ அந்த கவருடன் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் நான், அரசு சாட்சிகள் மற்றும் குழுவினருடன் அலுவலக மத்திய அறைக்கு வந்து சார்பதிவாளர் திருமதி.சுகம் அவர்களின் கைப்பையை பெற்று சோதனையிட்டதில் ரூ.740/- வைத்திருந்தார். அந்த பணம் அவரது சொந்த பணம்

என்றும் செலவிற்காக வைத்திருந்ததாக சொன்னார். அலுவலர்களின் தனி நபர் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிடுகையில் பதிவுகள் சரியாக ஒத்திருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. உதவியாளர் திரு.சந்திரமோகன் அவர்களை சோதனையிட்டதில் அவர் ரூ.7,250/- (Rs.2000 x 2, Rs.500 x 5, Rs.200 x 1, Rs.100 x 5, Rs.10 x 5) வைத்திருந்தார். அது பற்றி கேட்டபோது, அவர் இன்றைய தினம் அலுவலகத்திற்கு வரும்போது மொத்தம் ரூ.8,000/- கொண்டு வந்ததாகவும், அதில் அலுவலகத்தில் நேற்று வசூல் செய்யப்பட்ட பணம் ரூ.600/- தன் கைவசம் இருந்ததாகவும், அதை இன்று காலை ரெமிட் செய்ய கொடுத்துவிட்டதாகவும், ரூ.200/- பத்திர எழுத்தர் அன்புச்செழியன் என்பவருக்கு மதிய உணவு சாப்பிடக் கேட்டதால் அவருக்கு கொடுத்ததாகவும், மீதிப்பணம் தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்தார். தனிநபர் பதிவேட்டினை பார்வையிட்டதில் அவர் ரூ.8,000/- கையிருப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் சோதனையின்போது அவரிடமிருந்த பணம் ரூ.7,250/-க்கு அவர் சொன்ன காரணம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் அப்பணம் ரூ.7,250/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திருமதி.ஜெயசித்ரா அவர்களின் கைப்பையை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.500/- இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவர் தனது சொந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் எற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.500/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலக உதவியாளர் திரு.நல்லுசாமி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.160/- இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவர் தனது சொந்த செலவிற்காக ரூ.200/- கொண்டு வந்ததாகவும், அதில் ரூ.40/- டீ சாப்பிட செலவு செய்துவிட்டதாகவும், மீதி ரூ.160/- வைத்துள்ளதாக தெரிவித்தார். தனிநபர் பதிவேட்டை பார்வையிட்டதில் அவரது பெயரில் ரூ.200/- குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் சொன்ன விளக்கம் எற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.160/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பி3 உதவியாளர் திருமதி.M.கீதா அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. அவர் தன் கைவசம் மாவட்ட பதிவாளர் அலுவலக ந.க.எண்.8382/ஆ3/2018 மதிப்பு நிர்ணயம் செய்ய வேண்டிய கோப்பு,

இணை சார்பதிவாளர் அலுவலக ந.க.எண்.5585/ஆர்/2018-க்கு உரியது என்றும், அதனுடைய மற்றொரு நகல் பெற வந்ததாக தெரிவித்தார். பின்னர் மாவட்ட பதிவாளர் தணிக்கை அலுவலகத்தில் பணிபுரியும் தட்டச்சர் செல்வி.A.பரமேஸ்வரி அவர்களை சோதனையிட்டதில் பணம் எதுவும் வைத்திருக்கவில்லை. ஜுன் மற்றும் ஜுலை 2018-க்குரிய தணிக்கை அறிக்கையில் சந்தேகம் குறித்து கேட்பதற்காக வந்ததாக தெரிவித்து அவர் கையில் வைத்திருந்த அவ்வறிக்கையின் 3 பிரதிகளை காண்பித்தார். அவர்கள் இருவரும் அவர்களது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் மேற்படி திருமதி.சரஸ்வதி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.9,030/- இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவர் இன்று 23.01.2019-ஆம் தேதி தான் முதன் முதலாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரெக்கார்டு ஸ்கேனிங் செய்யும் வேலைக்காக ஆலன் இன்போடெக் கம்பெனியின் சார்பாக வந்ததாகவும், நாமக்கல் டவுன், இராமாபுரம்புதூரில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுவில் தனது சொந்த செலவிற்காக ரூ.9,000/- கடனாக பெற்று அப்பணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரும்போது கொண்டு வந்ததாக சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அப்பணம் ரூ.9,030/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் நான் மேற்படி செல்வி.K.ரம்யா அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.160/- இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவர் தனது சொந்த பணம் என்று சொன்னார், அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.160/- அவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேற்படி நிகழ்வுகளுக்கு அரசு சாட்சிகள், சார்பதிவாளர் முன்னிலையில் என்னால் செயல்முறை நடவடிக்கைகள் 23.01.2019-ஆம் தேதி மாலை 15.45 மணி முதல் 18.00 மணி வரை தயார் செய்யப்பட்டது, அதில் கையொப்பம் செய்யப்பட்டது. திரு.S.சந்திரமோகன்-உதவியாளர் அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திடீர் தணிக்கையின் முடிவில் சார்பதிவாளர் அலுவலக பதிவறையிலிருந்தும் மற்றும் உதவியாளர் திரு.S.சந்திரமோகன் என்பவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு அலுவலர்களால் திருப்திகரமான விளக்கம் தரஇயலவில்லை. சார் பதிவாளர் அலுவலகத்திற்கு பொறுப்பு அதிகாரி சார்பதிவாளர் ஆவார். எனவே ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, மேற்படி கைப்பற்றப்பட்ட தொகைகள் பொதுமக்களிடமிருந்தோ, பத்திர பதிவு ஆவண எழுத்தர்களிடமிருந்தோ,

இடைத்தரகர்கள் மூலமாகவோ 1-எண் இணை சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பொது ஊழியர் என்ற ரீதியில் தங்களது பதவியை துஷ்பிரயோகம் செய்து கையூட்டாக பெற்றுள்ளார்கள் என்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால் திருமதி.A.சுகம், அலுவலக கண்காணிப்பாளர்/1-எண் இணை சார்பதிவாளர் (பொறுப்பு) மற்றும் திரு.S.சந்திரமோகன்-உதவியாளர், 1-எண் இணை சார்பதிவகம் அலுவலகம், நாமக்கல் ஆகிய அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று இன்று 24.01.2019-ம் தேதி பகல் 12.30 மணிக்கு எதிரிகள் 1) திருமதி.A.சுகம், அலுவலக கண்காணிப்பாளர்/ 1-எண் இணை சார்பதிவாளர் (பொறுப்பு), 2) திரு.S.சந்திரமோகன்-உதவியாளர், 1-எண் இணை சார்பதிவகம் அலுவலகம், நாமக்கல் ஆகிய அலுவலர்கள் மீது நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2019, u/s. 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C.,-இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணையை மேற்கொள்ள நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.மு.நல்லம்மாள் அவர்களுக்கு பணிக்கப்பட்டது.

(signature) 24/01/19

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.